**<u>செய்தி வெளியீடு எண் 213 5.3.2010</u>**

# <u>காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த மூன்று பேருக்காக தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை</u>

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகையின் எதிரில் சாலையோரம் இரு சக்கர மொபெட் வாகனத்தின் அருகில் குழந்தைகளுடன் நின்று கொண்டிருந்தவர்கள் மீது தனியார் பேருந்து மோதிய விபத்தில் செங்கல்பட்டு வட்டம், கழனிப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு.நடராஜ் என்பவரின் மகன் பூபதி (வயது 48), திரு.கஜபதியின் 7 வயதான இரட்டைக் குழந்தைகள் ராமன் மற்றும் லட்சுமணன் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; இந்த விபத்து குறித்த விவரங்கள் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்கள். அத்துடன் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையையேற்று, இச்சம்பவத்தைச் சிறப்பு நிகழ்வாகக் கருதி, உயிரிழந்தவர்கள் ஒவ்வொருவருக்காகவும் தலா 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண நிதியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (5.3.2010) ஆணையிட்டுள்ளார்.

வெளியீடு

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை,

தலைமைச்செயலகம்,

சென்னை 9